முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம்,

திட்டக்குடி.

**OS.175/2013 C/W 119/2014 DW:1 24.01.2024**

2024 ஆம் ஆண்டு ஜனவரி திங்கள் **24** ம் நாள் வாதி தரப்பு சாட்சியாகிய ரெங்கசாமி என்பவரின் வாக்குமூலம் 1873 ஆம் ஆண்டின் 10-வது விதியின் ஏற்பாட்டின்படி திருமதி.T.நித்யகலா, B.Com., B.L., ஆகிய என்னால் ஆணையிடப்பட்டு உறுதி கூறப்பட்டு சத்திய பிரமாணம் செய்யப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | திரு.ரெங்கசாமி | வயது | 78 |
| த/க. பெயர் | கருப்புசாமி | தொழில் | விவசாயம் |
| ஜாதி | | கிராமம் | சேவூர் |
| வட்டம் | | மாவட்டம் | |

**வாதி தரப்பு குறுக்கு விசாரணை**

6. சேவூர் புல எண்.8/6 சந்திரா தாக்கல் செய்த வழக்கில் பி செட்டியூல் சொத்து என்றால் சரிதான். 119/2014 ல் நீங்கள் சந்திரா பேரில் ஒரு வழக்கு தாக்கல் செய்துள்ளீர்கள் என்றால் அது சர்வே எண் 8/6 க்குதான் என்றால் ஆமாம். அந்த முன் வழக்கும் சந்திரா போட்ட வழக்கிலும், நீங்கள் தாக்கல் செய்த வழக்கிலும் உங்களுக்காக ஒரே வழக்கறிஞர் ஆஜரானார் என்றால் ஆமாம். நீங்கள் கூறிய விபரத்தைதான் எதிர்வழக்குரையில் தாக்கல் செய்தார்கள் என்றால் ஆமாம். உங்களுக்கு விரோதமாக வழக்கறிஞர் செயல்படமாட்டார் என்றால் ஆமாம். உங்களுக்கு படிக்க தெரியுமா என்றால் தெரியும், தற்போது வயதானதால் புரியவில்லை. தற்போது படிக்க தெரியாது. நீங்கள் தாக்கல் செய்த பிராதிலும், எதிர்வழக்குரையிலும் உள்ள சங்கதிகளை வழக்கறிஞர் படித்துக் காண்பித்தபிறகுதான் கையெழுத்து போட்டீர்கள் என்றால் சரிதான்.

7. முதல் விசாரணை வாக்குமூலம் சர்வே எண் 8/6 என்பதில் கலியபெருமாள் உங்களுக்கு வாய்மொழி தானமாக கொடுத்ததாகத்தான் தாக்கல் செய்துள்ளீர்கள் என்றால் சரியல்ல. நீங்கள் முதலில் 24.08.2023 ல்

தாக்கல் செய்த வாக்குமூலத்தில் உள்ள கையெழுத்து உங்களுடையதா என்றால் இல்லை. சாட்சி பின்னிட்டு என்னுடைய கையெழுத்தா என்பது கண்ணில் பிரச்சினை உள்ளதால் புரியவில்லை என்று கூறினார். நீங்கள் முதன் முதலில் 24.08.2023 தாக்கல் செய்த முதல் விசாரணை வாக்குமூலம் உண்மையானது என்று தாக்கல் செய்துள்ளீர்கள் என்றால் ஆமாம். அதில் குப்புசாமி உங்களுக்கு ரூ.75/- வாங்கிக்கொண்டு வாய்மொழியாக கிரயம் கொடுத்தார் என்று சொல்லவில்லை என்றால் சொல்லியுள்ளேன். ஓ.எஸ்.175/2013 என்ற வழக்கிலும் எதிர்வழக்குரையில் குப்புசாமி உங்களுக்கு ரூ.75/- வாங்கிக்கொண்டு வாய்மொழியாக கிரயம் கொடுத்தார் என்று சொல்லவில்லை என்றால் சொல்லியுள்ளேன்.

8. குப்புசாமியின் மனைவி முனியம்மாள் என்றால் சரிதான். குப்புசாமியின் திருமணத்திற்காக செட்டில்மெண்ட் முனியம்மாளுக்கு எழுதிக்கொடுத்தாரா என்றால் கொடுத்துள்ளார். அந்த செட்டில்மெண்ட் ஜீலை மாதம் 1962 ம் ஆண்டு ஏற்பட்டது என்றால் சரிதான். அந்த செட்டில்மெண்ட்படி குப்புசாமி கோனாருடன் முனியம்மாள் திருமணம் செய்துகொண்டு நீ என்னை கலியாணம் செய்துக்கொண்டு என்னுடன் ஒற்றுமையாக குடும்பம் நடத்தி வரவேண்டியது கீழ்கண்ட சொத்தை உன் சுவாதீனத்தில் ஒப்புக்கொண்டு சொத்தை பராதீனங்களுக்கு உட்படுத்தாமல் அனுபவித்து வரவேண்டியது. நமக்கு சந்ததிகள் ஏற்பட்டால் நம் ஆயுளுக்கு பிறகு சந்ததிகளே சொத்தை சர்வ சுதந்திரமாய் அடையவேண்டியது . சந்ததிகள் இல்லாவிட்டால் நம்மில் ஒருவர் ஆயுளுக்கு பிறகு மற்றொருவர் சர்வ சுதந்திரமாய் அடையவேண்டியது என்று எழுதிக்கொடுத்தார் என்றால் சரிதான். ஆனால் 1963 ல் கிரயமும் கொடுத்துவிட்டார். சர்வே எண் 8/6 ஐ எழுத்துமூலமாக கிரயம் செய்துக்கொடுத்தாரா என்றால் வாய்மொழியாக கிரயம் கொடுத்துள்ளார். வாய்மொழியாக கிரயம் கொடுத்தது சம்மந்தமாக சந்திரா போட்ட ஓ.எஸ்.175/2013 ல் நீங்கள் சொல்லவில்லை என்றால் சரியல்ல. முனியம்மாளுக்கு செட்டில்மெண்டில் 8/6 ல் பொதுவில் 59 செண்டில் 20 செண்டு என்று எழுதிக்கொடுத்துள்ளார் என்றால் ஆமாம்.

8/6 க்கான சிட்டா கருப்புசாமி, குப்புசாமி, கலியபெருமாள், ராமசாமி ஆகியோர்களுக்கு கூட்டுப்பட்டா இருந்தது என்றால் சரிதான். அந்த ராமசாமி வேறு ராமசாமி. அதில் ராமசாமி அப்பா பெயர் தவறுதலாக உள்ளது என்றால் ராமசாமி அப்பா பெயர் சின்னகோனார். ராமசாமி அப்பா பெயர் கிருஷ்ண கோனாரா என்றால் இல்லை.

9. வாசாஆ 10 ல் பட்டா புத்தகத்தில் 8/6 என்பது கூட்டுப்பட்டா கொடுத்துள்ளார்கள் என்றால் ஆமாம். உங்களுக்கும் மஞ்சள் புத்தகம் கொடுத்தார்களா என்றால் என்னிடமும் உள்ளது. அது கூட்டுப்பட்டா என்பதால்தான் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. வாசாஆ 10 ல் பட்டா புத்தகம் 1974 ல் கொடுத்தது என்றால் சரிதான்.

10. முனியம்மாளின் மகள் மஞ்சுளா என்றால் சரிதான். முனியம்மாளுக்கு எத்தனை பிள்ளைகள் என்றால் ஒரு மகன் சிறுவயதில் இறந்துவிட்டான். பச்சமுத்து, மஞ்சுளா ஆகியோர்கள் . பச்சமுத்து இறந்துவிட்டார் என்றால் திருமணமாகி இறந்தார். அந்த பச்சமுத்து மனைவி புஷ்பா என்றால் சரிதான். பச்சமுத்துவிற்கும் புஷ்பாவிற்கும் வெற்றிவேல் , சக்திவேல் என்ற இரு பிள்ளைகள் என்றால் சரிதான்.

11. 8/6 ல் முனியம்மாள் , புஷ்பாவிற்கும் அவரது மைனருக்கும் சேர்ந்து 20 சென்டை கிரயம் கொடுத்துவிட்டார்கள் என்றால் கொடுத்துவிட்டார். 8/6 ல் 59 செண்டிற்கு உங்கள் அப்பா பெயரிலோ உங்கள் பெயரிலோ தனிப்பட்ட முறையில் பட்டா உள்ளதா என்றால் கூட்டுப்பட்டா உள்ளது. அடங்கல் முழுவதும் என் அப்பா பெயரில் உள்ளது. சொத்தின் பட்டா எண் 411. யூடிஆர் 1985 லிருந்து சொத்திற்கு பட்டா எண் 411 என்றால் சரிதான். யூடிஆருக்கு முன்பு மஞ்சள் பட்டா பாஸ் புத்தகத்தில் பட்டா எண் 100 என்றால் சரிதான். 100 நெம்பர் பட்டாவும் உங்கள் பெயரிலோ உங்கள் அப்பா பெயரிலோ தனிப்பட்டா இல்லை என்றால் சரிதான். 411 ம் நெம்பர் பட்டாவில் உங்கள் அப்பா பெயர்தான் முதலில் எழுதப்பட்டுள்ளது என்றால் சரிதான். பிசாஆ 6 ல் அடங்கலில் உங்கள் அப்பாவின் பெயர் உள்ளதாலேயே சொத்து உங்களுக்கு பாத்தியமானது அல்ல என்றால் சரியல்ல. வாய்மொழி கிரயம் குப்புசாமியும்,

முனியம்மாளும் இன்னன்னாருக்கு முன்னிலையில் கிரயம் கொடுத்தார் என்று சொல்லியுள்ளீர்களா என்றால் வழக்கில் சொல்லவில்லை. குப்புசாமி முனியம்மாளுக்கு செட்டில்மெண்ட் எழுதிக்கொடுத்தபிறகு கிரயம் கொடுக்க உரிமை இல்லை என்றால் சரியல்ல. முனியம்மாளுக்கு ஆயுசுக்கும் உரிமை உள்ள நிலையில் கிரயம் கொடுக்க உரிமை இல்லை

என்றால் சரியல்ல பிசாஆ,3 உயில் சம்மந்தமாக சாட்சிகள் யாரையும் விசாரிக்கவில்லை என்றால் சரிதான். ஜெயராமன், நாராயணன் இறந்துவிட்டார்கள். பிசாஆ 3 சம்மந்தமாக எழுத்துக்காரரையும் விசாரிக்கப்போவதில்லை என்றால் ஆமாம். எழுத்துக்காரர் பழனிமுத்துவிற்கு சாட்சி சம்மன் படிக்கட்டவில்லை என்றால் சரிதான்.

12. பிசாஆ 2 சம்மத உடன்படிக்கை சம்மந்தமாக உங்களுடைய 175/2013 எதிர்வழக்குரை மற்றும் 119/14 வழக்குரையிலும் சொல்லவில்லை என்றால் சொல்லியுள்ளேன். சம்மத உடன்படிக்கையும், கையெழுத்து போட்ட பச்சமுத்து , சின்னதுரை போட்ட ஆவணம் ஜோடிக்கப்பட்ட ஆவணம் என்றால் இல்லை. கலியபெருமாள் அவருக்கு பாத்தியமான சொத்துக்களை கிரயம் கொடுத்தாரா என்றால் கொடுத்துள்ளார். யாருக்கு கொடுத்துள்ளார் என்றால் 1985 ல் 1 ஏக்கரை என்னிடம் கிரயம் கொடுத்துள்ளார். அந்த கிரய பத்திரம் உங்களிடம் உள்ளது என்றால் உள்ளது. 31.12.1985 ல் கிரயம் கொடுத்தாரா என்றால் தேதி நினைவில்லை. அவர் கிரயம் கொடுத்தது 7/2 பி, 7/5 சி, 7/12, 8/4 என்றால் சரிதான். இந்த கிரய பத்திரத்தை பதிவிற்கு தாக்கல் செய்தது கலியபெருமாள்தான் என்றால் ஆமாம். அதில் அவர் கைரேகை வைத்துள்ளார் என்றால் சரிதான். ஒவ்வொரு பக்கத்திலும் பதிவு அலுவலர் முன்னிலையில் கைரேகை வைத்தார் என்றால் சரிதான். அந்த பத்திரத்தை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். அந்த உயில் ஜோடிக்கப்பட்டது என்று சந்திரா கட்சி எடுத்துள்ள நிலையில் 1985 கிரய பத்திரத்தில் உள்ள கைரேகையும், நீங்கள் சொல்லியுள்ள உயிலில் உள்ள கைரேகையையும் கைரேகை நிபுணர் ஆய்விற்கு அனுப்ப நடவடிக்கை எடுக்கவில்லை என்றால் சரிதான். இது ஆய்விற்கு சென்றால் கைரேகை

ஒன்றாக உள்ளதா , மாறுபட்டுள்ளதா என்பது தெரியவரும் என்றால் சரிதான்.

13. பழனிமுத்து என்பவர் பதிவு பெற்ற ஆவண எழுத்தரா என்றால் தெரியாது. பிசாஆ 2 ல் ஆவண எழுத்தரின் லைசன்ஸ் எண் போட்டுள்ளதா என்றால் போட்டுள்ளது. பிசாஆ 3 ல் ஆவண எழுத்தரின் லைசன்ஸ் எண் உள்ளதா என்றால் சரியாக புரியவில்லை. உயில் எழுதும்போது நீங்கள்
உடன் இருந்தீர்களா என்றால் இல்லை. உயில் எங்கு எழுதப்பட்டது என்று உங்கள் வாக்குமூலத்தில் உள்ளதா என்றால் வாக்குமூலத்தில் சொல்லியுள்ளேன். சாட்சி ஜெயராமன் அப்பா பெயர், ஊரை யார் பூர்த்தி செய்தது என்றால் பழனிமுத்துதான் எழுதினார். நாராயணசாமி அப்பா பெயர் வெங்கடாசலம் கோனார் , சேவூர் என்று யார் எழுதியது என்றால் பழனிமுத்துதான் எழுதினார். ஜெயராமன் எப்போது இறந்தார் என்றால் பத்திரம் எழுதியதில் இருந்து 6 வருடம் ஆகிறது. நாராயணசாமி இறந்து எவ்வளவு வருடம் ஆகிறது என்றால் பத்திரம் எழுதியதில் இருந்து 7 வருடம் ஆகிறது. சரியாக ஞாபகம் இல்லை. உயில் எழுதிய தாள்கள் அனைத்தையும் மண்தரையில் வைத்து நீங்கள் தீத்தினீர்களா என்றால் இல்லை. கலியபெருமாள் கோனார் உயில் எழுதிக்கொடுத்ததாக நீங்கள் கூறுவது தவறு என்றால் கலியபெருமாளின் கைரேகை இல்லை என்றால் சரியல்ல. உண்மையில் கலியபெருமாள் உயில் எழுதிவைத்திருந்தார் ஓ.எஸ்.175/2013 வழக்கில் சொல்லியிருப்பீர்கள் என்றால் அதிலும் சொல்லியுள்ளேன். ஜெயராமன், நாராயணாசமி கையெழுத்து காண்பிக்க ஆவணங்கள் தாக்கல் செய்யவில்லை என்றால் தாக்கல் செய்யவில்லை.

14. நீங்கள் பிசாஆ 4 உங்கள் பையனுக்கு செட்டில்மெண்ட் எழுதிக்கொடுத்தது 19.07.2013 என்றால் சரிதான். அதில் கலியபெருமாள் உயில் எழுதிவைத்தது மூலமாக கிடைத்த சொத்து என்று உள்ளதா என்றால் உள்ளது. உயில் நீங்கள் ஜோடித்ததால்தான் உயில் பற்றி பத்திரத்தில் சொல்லவில்லை என்றால் உயில் பற்றி பத்திரத்தில் சொல்லியுள்ளேன். 8/6 ல் உங்களுக்கு 20 செண்டிற்கு மேல் உரிமை இல்லை என்றால் சரியல்ல.

15. பிசாஆ 5 சித்ரா, செல்வராஜ் சம்மந்தப்பட்ட பரிவர்த்தனையில் நீங்கள் ஒ

சாட்சி எதுவும் போடவில்லை என்றால் போட்டுள்ளேன். செல்வராஜ் என்பவர் யார் என்றால் அவர் வேறு சமூகத்தை சார்ந்தவர். உங்கள் பையன் பெயரில் செட்டில்மெண்ட் எழுதிக்கொடுத்துள்ளீர்கள் என்றால் சரிதான். மைனராக இருக்கும்போது சொத்தை பரிவர்த்தனை செய்யும்போது உங்கள் மனைவி மாவட்ட நீதிமன்றத்தில் அனுமதி பெற்றாரா என்றால்
வாங்கவில்லை. வழக்கு சொத்தில் வில்லங்கம் ஏற்படுத்தவேண்டும் என்பதற்காக பிசாஆ 4, 5 ஏற்படுத்தப்பட்டது என்றால் சரியல்ல. நீங்கள் தாக்கல் செய்த தீர்வை ரசீது, வீட்டுவரி ரசீது , வாய்தா ரசீதுகள் அனைத்தும் 8/6 சொத்திற்கு முழுவதும் பொருந்தாது என்றால் சரியல்ல.

16. நீங்கள் காவல் நிலையத்தில் புகார் கொடுத்ததற்கு எப்ஐஆர் போட்டு வழக்கு பதிந்தார்களா என்றால் எப்ஐஆர் போடவில்லை. நீங்கள் புகார் கொடுத்தது செல்வராசுவிற்கு பரிவர்த்தனை ஆன சொத்து என்று புகார் கொடுத்துள்ளீர்கள் என்றால் ஆமாம். செல்வராஜ் புகார் கொடுக்கவில்லை என்றால் சந்திராதான் புகார் கொடுத்தார்.

17. 8/6 வின் தெற்கால் தார் ரோடு செல்கிறதா என்றால் செல்கிறது. தார் ரோட்டிற்கு வடக்கால் கீழ்புறம் 8/6, மேற்புறம் 8/4 என்றால் வடபுறம் 8/4 தென்புறம் 8/6 . 8/6 , 8/4 க்கு கிழக்கால் 8/5 என்றால் சரிதான். ஆணையர் வந்து சர்வேயருடன் வந்து அளந்தார்களா என்றால் அளந்தார்கள். வீடு 8/4 ல் உள்ளதா என்றால் 8/6 ல் உள்ளது. 8/4 ல் வீடு உள்ளது என்று ஆணையர் தாக்கல் செய்ததற்கு நீங்கள் ஆட்சேபனை செய்யவில்லை என்றால் செய்துள்ளேன். தார் ரோட்டிற்கு 8/6, 8/4 க்கு நடுவில் புறம்போக்கு உள்ளது என்றால் ஓரத்தில் உள்ளது. அந்த புறம்போக்கு, ரோடு புறம்போக்கு சர்வே எண் 9 ல் உள்ளது. சர்வே எண் 9 ல் ஆழ்குழாய் கிணறு இருந்து அதற்கு நீங்கள் மின் இணைப்பு வாங்கியுள்ளீர்களா என்றால் இல்லை. 8/4 க்கு வாங்கிய சர்வீசை 9 க்கு பயன்படுத்தினால் சர்வீசை ரத்து செய்ய மின்வாரியத்திற்கு உரிமை உண்டு என்றால் 9 ல் தண்ணீர் இல்லாததால் 8/4 லிருந்து எடுத்தேன். மீண்டும் தண்ணீர் வந்ததும் எடுத்துவிட்டேன். சர்வே எண் 9 என்பது புறம்போக்குவிற்கு உங்கள் பெயரில் அடங்கல் உள்ளதா

என்றால் உள்ளது. அந்த அடங்கலை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான்.

18. 8/5 ல் 75 செண்டு சந்திராவிற்கு பாத்தியமானது என்றால் ஆமாம். 8/6 ல் சந்திராவின் கணவருக்கு 15 செண்டு பாத்தியம் என்றால் இல்லை. சந்திராவின் கணவர் பெயர் ராமசாமி என்றால் சரிதான். ராமசாமி அப்பா பெயர்

கிருஷ்ண கோனார் என்றால் சரிதான். ஏற்கனவே சந்திரா கணவரை கொலை செய்தது சம்மந்தமாக உங்கள் பெயரில் வழக்கு நடந்தது என்றால் சரிதான். நீங்கள் கொலை செய்ததாக நீதிமன்றத்தில் தீர்ப்பு வழங்கி சிறைதண்டனை அனுபவித்தீர்கள் என்றால் சரிதான், ஆனால் பொய் வழக்கு, ராமசாமி கொலை செய்த காலத்திலிருந்து உங்கள் குடும்பத்திற்கும் சந்திரா குடும்பத்திற்கும் முன் விரோதம் இருக்கிறது என்றால் ஆமாம். 8/6 ல் சந்திராவின் கணவருக்கு பூர்வீகமாக 15 செண்டு பாத்தியம் என்றால் சரியல்ல. பட்டாவில் கிருஷ்ணகோனார் என்பதற்கு பதிலாக முத்துசாமி கோனார் என்று உள்ளது என்றால் சரியல்ல. பிசாஆ 4,5 ஆகியவைகள் அமுலுக்கு வரவில்லை என்றால் சரியல்ல. வழக்கு தாக்கல் செய்வதற்கு முன்பு சந்திராவிற்கு நோட்டீஸ் கொடுத்தீர்களா என்றால் இல்லை. நீங்கள் கொடுத்த நோட்டீசிற்கு சந்திரா பதில் கொடுத்துள்ளார் என்றால் அவர்கள் கொடுத்த நோட்டீசிற்கு நான் பதில் கொடுத்தேன். 8/6 ல் சந்திராவிற்கு பூர்வீக பாத்தியமான 15 செண்டு முனியம்மாள் வகையறாவிடம் இருந்து கிரயம் பெற்ற வகையில் 20 செண்டு சேர்த்து 35 செண்டிற்கு ஓ.எஸ்119/2014 வழக்கில் முதல்நிலை தீர்ப்பாணை வழங்கவேண்டும் என்றால் சரியல்ல.

19. குப்புசாமியும், முனியம்மாளும் வாய்மொழியாக எந்த காலத்திலும் வழக்கு சொத்தை கிரயம் கொடுக்கவில்லை என்றால் சரியல்ல. ஓ.எஸ்.175/2013 என்ற வழக்கில் வாதி கோரியபடி தீர்ப்பாக வேண்டும் என்றால் சரியல்ல. ஓ.எஸ்.119/2014 வழக்கு நீங்கள் கோரிய பரிகாரத்தை தள்ளுபடி

செய்து எதிர்கோருரிமை அனுமதிக்கவேண்டும் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை** இல்லை.

**Typed to my dictation in the open Court as per the statement of the witness, read over to the witness and admitted by him/her to be correct.**

**(Sd/Nithyakala)**
**Principal District Munsif,**
Tittagudi